# THE COMING OF A KHALEEFATHULLAH
# கலீஃபத்துல்லாஹ்வின் தோற்றம்

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 22-05-2009

## FRIDAY SERMON

# HAZRAT MUNIR AHMAD AZIM (A)

**"நிச்சயமாக நான் பூமியில் ஒரு கலீஃபாவை அமைக்கப்போகின்றேன் (2-31)**

**"என்னிடமிருந்து உங்களிடம் எதாவது நேர்வழி வருமாயின் எனது நேர்வழியினை பின்பற்றி நடப்போர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றி எந்த அச்சமும் இருக்காது. இறந்த காலத்தை பற்றி அவர் துயரவும் அடையமாட்டார்கள்"** (2-39).

மேல் கூறிய திருகுர்ஆன் வசனத்தின் ஒளியில் பார்த்தால் ஒரு உண்மை புலனாகின்றது. அதாவது ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் தோற்றம் என்பது அல்லாஹ்வின் மிகப்பெரிய அருளேயாகும்.

மனித உள்ளம் பகுத்தறிவின் பாதையில் பயணம் செய்ய துவங்கிய காலம் முதல் அவர்களுக்கு நல்வழிகாட்டிட இப்பூவுலகில் அல்லாஹ் அவனது நபிமார்களை ஏற்படுத்தினான். நபிமார்களின் வருகையோடு இப்பாரினில் இறை கருணைகளுடையவும் அருள்களுடையவும் மாபெரும் வாசல் திறக்கப்பட்டது. இந்த நபிமார்களின் காலத்திற்கு பிறகு, அல்லாஹ் அவனது கருணையின் மற்றொரு அவதாரம் வழியாக உலகத்திற்கு அருள் செய்கின்றான். அதாவது பக்தராகிய மனிதர்களுக்கு முன் இறையருளின் இரண்டாம் வல்லமை தோன்றுகின்றது. அந்த வல்லமையில் முஜத்தீதுகள், சீர்திருத்தாளர்கள், மார்க்கத்திற்கு மறுவாழ்வு கொடுப்பவர்கள், மஸீஹ்-கள், அல்லாஹ்வின் கலீஃபாக்கள் போன்றவர்கள் உட்படுகின்றார்கள் என்பதாகும்.

**நிச்சயமாக நான் பூமியில் ஒரு கலீஃபாவை அமைக்கப்போகிறேன்** என்ற வசனத்திருந்து கலீபத்துல்லாஹ்வை அதாவது அல்லாஹ்வின் கலீஃபாவை அவனே நேரடியாக நியமிக்கின்றான் என்பது உறுதியாகின்றது. மக்களால் வாக்களித்து தேர்வு செய்கின்ற ஒரு கலீஃபாவல்ல இது என்பது போலவே ஒரு அமச்சரையோ அல்லது ஒரு பாராளுமன்ற உறுப்பினரையோ வாக்கெண்ணி தேர்ந்தெடுக்கின்ற முறையோடும் இதை ஒப்பிடவும் இயலாது. ஆகவே ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் பதவி சிறப்பானதாகும். ஏனெனில் கலீஃபத்துல்லாஹ்வை தேர்ந்தெடுக்கின்றது எல்லாம் வல்ல அல்லாஹ்வே ஆவான். மாறாக மக்களல்ல. அல்லாஹ்வே நேரடியாக நியமிக்கின்ற கலீபத்துல்லாஹ்வை அவனே மகத்துவப்படுத்துவதோடு ஞானவும், ஆன்மீகவும் ஆன நிலையில் அவரை அருள்கொடைகளால் போர்த்துகின்றான். மட்டுமின்றி சிறப்பான நல்லொழுக்க பண்புகளும் ஆன்மீக உயர்வுகளும் அவர் வழியாக ஒளிக்க செய்கின்றான். ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் வருகை இஸ்லாமிக சமுதாயத்திற்கு அருளாக மாற காரணமே இந்த சிறப்புகள் மூலமாகும் என்பதே உண்மை.

முற்றிலும் வேதனைகளும் இன்னல்களும் நிறைந்த ஒரு கட்டம் வழியாக இன்று இஸ்லாம் பயணம் செய்கின்றது. அதனால் இக்காலகட்டத்தில் ஒரு கலீஃபத்துல்லாஹ் மூலமாக ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்த அல்லாஹ் நாடுகின்றான். குறிப்பாக இக்காலகட்டத்தில் இஸ்லாமின் போதனைகள் யாவும் எட்டிமிதிக்கப்பட்டிருக்கின்றது. அதை தடுத்து கொள்ள கடமைப்பட்டவர்களே குழப்பகாரர்களாக மாறியிருக்கின்றன, முஸ்லீம்கள் என்று உரிமை கோரும் அனைவரும் வேஷத்தாரிகளாக பரிணமிக்கவும் செய்த இக்காலத்தில் குழப்பங்கள் யாவும் அதன் மறை நீக்கி வெளிப்பட்டிருக்கின்றது.

அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் நிறுவுனரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது(அ) அவர்கள் நமக்கு தந்திருக்கின்ற போதனைகள் எவ்வாறு என்று பாருங்கள். ஷஹாதத்துல் குர்-ஆன் என்ற நூல் (பக்கம் 48-60) வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இவ்வாறு கூறுகின்றார். **''குத்ரத்தே சானியா''** நிரந்தரமானதாகும். அது இறுதி நாள் வரையிலும் தொடர்ந்து செல்லும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) பயன்படுத்திய குத்ரத்தே சானியா என்ற சொல் கிலாஃபத்தைக் குறித்தேயாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) மின் நோக்கத்தில் கிலாஃபத்து என்பதன் பொருள் கிலாஃபத்தே ரசூல் (தூதர்களை பின்தொடர்ந்து வருகின்ற கலீஃபாக்கள்) மட்டுமின்றி அதில் முஜத்தீதுகளும் உட்படுவார்கள் என்பதாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நம்பிக்கையின் அடிப்படையில் கூறினால், கிலாஃபத் என்றால் ரசூல்(ஸ) வுடைய காலத்திற்கு பிறகு தோன்றிய உண்மையாளர்களும் புனிதர்களுமாகிய நான்கு கலீஃபாமார்களின் முன்மாதிரிகையும் அதில் உட்படுகின்றன. அத்தோடு இறுதி நாள் வரையிலும் கிலாஃபத் நிலைநிற்க வேண்டுமென்று அல்லாஹ் நாடுகின்றான் என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) நம்பிக்கைக் கொண்டிருந்தார்.

அஹ்மதியா கிலாஃபத் என்றென்றும் நிலைகொள்ளும் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) அவர்கள் தனது நூல்களிலெங்கும் கூறியதில்லை. நிரந்தரமாக நிலைநிற்குமென்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) தெரியப்படுத்தியிருந்தது இரண்டு விஷயங்களை குறித்தேயாகும். 1. **''குதிரத்தே சானியா''**, 2. **''இஸ்லாமிக கிலாஃபத்.** குதிரத்தே சானியாவில் கிலாஃபத்தும் உட்படுகின்றது. ஆனால் அது குறிப்பிடுவது அஹ்மதியா கிலாஃபத் மட்டுமல்ல. ஏனெனில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) தனது ''அல் வஸியத்'' என்ற நூல் குத்ரத்தை உவமைபடுத்தியது ஹஸ்ரத் அபுபக்கர் சித்திக் (ர) வின் தலைமையில் உருவாகிய குதிரத்தோடு ஆகும். சுருக்கமாக கூறினால் ''**குதிரத்தே சானியா**'' என்பதை இஸ்லாமிக கிலாஃபத்தோடு ஒப்பிட்டு கொள்ளலாம்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அ) மின் காலகட்டத்தில் ஒருவர் அவரிடம் கேட்டார் ''உங்களுக்கு பிறகும் ஒரு முஜத்தீது வரலாமா''?. அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) கொடுத்த பதில் இவ்வாறாகும்.

''எனக்கு பிறகு ஒரு முஜதீத்து வரவேண்டுமென்றால் அதில் என்ன தவறு? ஏனெனில் ஹஸ்ரத் மூஸா நபி(அ) மின் கிலாஃபத் ஹஸ்ரத் ஈசாநபி(அ) மின் வருகையோடு முடிவடைந்தது. ஆனால் ஹஸ்ரத் முஹமது(ஸ) மின் கிலாஃபத் இறுதி நாள் வரையிலும் தொடர்ந்து கொண்டிருக்கும். ஆகவே இறுதிநாள் வரையிலும் முஜத்தீதுமார்கள் எழுப்பப்படுவார்கள். நேர்மையானவர்களும், பயபக்தர்களுமாகிய அவனது அடியார்களுக்காக அல்லாஹ்அவனது நபிமார்களையும் முஜத்தீதுமார்களையும் தேர்ந்தெடுத்து அவர்களோடு அவன் உரையாடுவான் என்ற உண்மையை நான் மறுக்கமாட்டேன்''. (மல்பூசாத் வாளியம் 7, பக்கம் 119.)

அதைப்போன்றே அஹ்மது (அ) இவ்வாறு கூறுகின்றார்கள்.

''இறுதி நாள் அதன் நாசம் விலகி நிற்கும் காலம். வேறொருவர் வருகையில் தடங்கல் எதுவும் இல்லை. நல்லவர்களும் இறைபக்தர்களுமான மஹாத்மாக்கள் மேலும் வருகைதருவார்கள் என்பதை நான் மறுக்கமாட்டேன். அதற்கு பிறகு இறுதிநாள் எதிர்பாராத நிலையில் வரும்''.

தனது ஷஹாதத்துல் குர்-ஆன் என்ற நூல் 46-ம் பக்கம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். ''ஒவ்வொரு காலகட்டத்திலும் இஸ்லாம் மதம் அதன் உயிர்கருத்தை பரிபூரணமான சான்றுகளின் அடிப்படையில் நிரூபிப்பது பலதரப்பட்ட முறைகளிலாகும். ஒவ்வொரு காலத்திலும் தோன்றுகின்ற தீமைகளையும் தவறுகளையும் மாய்த்துக்கொள்ள தேவையான ஆற்றல்களும் திறமைகளும், சக்திகளுமாக அக்காலகட்டத்தில் ஒரு முஜத்தீது அனுப்பப்படுகின்றார். இறைவன் நாடுகின்ற காலம் வரையிலும் இச்செயல் நீடித்துக்கொள்ளும். இறைபக்தியும் மார்க்க சீர்திருத்தவும் இவ்வுலகில் நிலை நிற்க வேண்டுமென்று அல்லாஹ் நாடிக்கொள்ளும் காலம் வரையில் இச்செயல் தொடர்ந்து கொள்ளும். இது சான்றுகளுக்கு அப்பாற்பட்ட விஷயமல்ல. ஏனெனில் வரலாறே இதற்கு சாட்சியமாகும்''.

மேலும் அதை குறித்து அஹ்மது (அ) தெரியப்படுத்திய மற்றொரு விஷயம் இவ்வாறாகும்.

**‘‘அலீஃப், லாம், றா’’** என்ற வசனத்தில் **‘‘றா’’** என்ற சொல் குறிப்பிடுவது, முஜத்தீதுகளும் இறைநேசர்களும் எக்காலத்திற்குமான ஒளியே ஆகும் என்று. அது இறுதி நாள்வரையிலும் நீடித்துக்கொள்ளும். தூதுவ அரசன் முஹமது (ஸ)வின் தோழமைக்கூட்டத்திருந்து உருவாகின்ற முஜத்தீதுகளின் அற்புத செயல்களும், வெற்றிகளும் நபி(ஸ) வுடைய மேன்மைகளே ஆகும்’’. (றுஹானி கஸாயின் நம்பர் 2, வாளியம் 2 பக்கம் 63).

பிரியமான சகோதர சகோதரிகளே மேல் கூறிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கருத்துகளின் அடிப்படையில் சிந்தித்து விஷயங்களை உணர்ந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் சுட்டிக்காட்டியது போன்று, நாம் பயன்படுத்தக்கூடிய உடைகள் ஒரு வாரத்துக்குள் அசுத்தமடைகின்றது. அதை நிச்சயமாக கழுகி சுத்தப்படுத்த வேண்டும் என்பது போலவே ஒரு நூற்றாண்டு கடந்து சென்ற நிலைக்கு மார்க்க போதனைகளை தூய்மைப்படுத்த ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் தேவையில்லையா? இருக்கின்றது நிச்சயமாக இருக்கின்றது. அக்காரணத்தினாலாகும் ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் மனிதர்களை சீர்திருத்த ஒரு சீர்திருத்தாளரை தோற்றுவிப்பேன் என்ற கருத்தை அல்லாஹ் அமல்படுத்தி வருவது.

ஒருநாள் ஒருவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) மிடத்தில் கேட்டார் எல்லா ஓரோ நூற்றாண்டிலும் சீர்த்திருத்தாளர் வரவேண்டியது தேவையா? அஹ்மது(அ) பதிலளித்தார் **‘‘ஆம், எல்லா நூற்றாண்டிலும் முஜத்தீது வரவேண்டியது தேவை ஆகும்’’.** அந்நபர் பிறகும் கேட்டார் அப்படியென்றால் கடந்த நூற்றாண்டுகளில் தோன்றியிருந்த முஜத்தீதுமார்களின் பெயர் வகைகள் யாவை கூறுங்கள்? அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) இவ்வாறு பதிலளித்தார். **‘‘முஜத்தீதுகளின் பெயர் வகைகள் கண்டுபிடிப்பது எனது வேலையல்ல. எல்லா நூற்றாண்டிலும் முஜத்தீதுகள் தோன்றுவார்கள் என்று கூறிய ஹஸ்ரத் முஹமது நபி (ஸ) வோடு இந்த கேள்வி கேட்க வேண்டும்’’.**

முஜத்தீதுகளின் தோற்றத்தைக் குறித்த இந்நபிமொழி பெரும்பாலான ஹதீஸ் பண்டிதர்களும் ஒத்துக்கொள்வதேயாகும் என்று ஹஸ்ரத் அஹ்மது (அ) தெரிவித்திருந்தார். ஷாஹ்வயுல்லாஹ் தஹ்லவ்வியும் இவ்வசனம் நபி(ஸ)வின் வசனம் என்றே சாட்சியளித்திருக்கிறார். இது திரு கதீஸ் நூல்களில் காணப்படுகின்றதும், இந்தஹதீஸை யாரும் புறக்கணித்ததாக தெளிவும் கிடையாது.

இந்த ஹதீஸ் எல்லா நிலையிலும் உண்மையானதே ஆகும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தீதுகள் தோன்றுவார்கள் என்பது எல்லோருக்கும் தெரிகின்ற ஒரு விஷயமாகும். ஒரு மனித உடம்பு ஒரு நூற்றாண்டில் நாசத்தை எட்டிவிடும் என்பது போன்றே ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் ஆன்மீக நாசவும் வந்து சேர்கின்றது. ஒவ்வொரு நூற்றாண்டுக்கு பிறகும் ஒவ்வொரு புதிய தலைமுறை உருவாகின்றது. அப்புதிய தலைமுறைக்கு ஆன்மீக அளவிலான புது வாழ்வை வழங்க ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தீதுகள் தோற்றுவிப்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நடைமுறையே ஆகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அ) அவர்கள் தனது ‘‘ஈஸாலயே அவ்ஹாம்’’ என்ற நூல் கூறுகின்றார்.

**‘‘மஸீஹ்மார்களின் வருகைக்கான வாசல்கள் என்றென்றும் திறந்தே கிடக்கும் என்றும் அவ்வாசல் ஒருபொழுதும் அடைவதில்லை’’** என்றும் அஹ்மது (அ) மிக தெளிவாக அறிவித்திருக்கின்றார். மட்டுமின்றி அவர் கூறுகின்றார் **‘‘நானே ஆவேன் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று உரிமை கோரும் நபர். ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்மார்களில் முதன்மையாகவும் இறுதியாகவும் அனுப்பப்பட்ட மஸீஹ் நானே என்று உரிமை கோரவில்லை. எனது பார்வையில் எனக்கு பிறகு பதினாயிரம் மஸீஹ்மார்கள் வரலாம். ஆனால் இக்காலத்திற்கான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன்’’** (பக்கம் 197).

மேல்கூறிய அஹ்மது (அ) மின் வார்த்தைகளைப் புரிந்து கொண்டதற்கு பிறகும், இஸ்லாமிக கிலாஃபத்தை பற்றிய அவரது நம்பிக்கையேயும், நோக்கத்தையும் மாற்றி எழுதவும் விளக்கவும் எவருக்கும் அதிகாரகமில்லை. ஆனால் துரதிர்ஷ்டம், அஹ்மதியா ஜமாத்தை சார்ந்த சில நபர்களும் குறிப்பாக மௌரிஷியஸ் அமீறும் மற்றும்

சில முல்லாக்களும் சேர்ந்து கிலாஃபத்தைப் பற்றி முற்றிலும் தவறான செய்திகளை பிரச்சாரம் செய்கின்றன. அஹ்மதியா கிலாஃபத் என்றென்றும் நிலைநிற்கும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். இத்தகை நம்பிக்கையாவும் ஹஸ்ரத் அஹ்மது (அ) மின் போதனைகளுக்கு எதிரானதே ஆகும்.

அஹ்மதியா நம்பிக்கையாளர்களுக்கு என்ன நிகழ்ந்தது? வாக்களிக்கப்பட்ட மஸீஹின் போதனைகளிலும், நூல்களிலுமுள்ள அவர்களின் நம்பிக்கை சரியா அல்லது தவறா? அவர்களின் நம்பிக்கை சரியென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் போதனைககளையும் நூல்களையும் அவர்கள் புறக்கணித்துக்கொண்டார்களா? மேல் கூறியவை ஒன்றும் எனது வார்த்தையோ எண்ணங்களோ அல்ல. மாறாக நானும் நீங்களும் ஏற்றுக்கொண்டிருக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ)மின் பாடங்களும் வேண்டுகோளும் ஆகும். ஆனால் இப்போதனைகள் அனைத்தும் மறக்கப்படுகின்றது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ன் போதனைகளை தூக்கி வீசிவிட்டு அஹ்மதிகள் என்று கூறிவரும் நீங்களோ அல்லது நானோ உண்மையை கூறிவருகின்றது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) மின் வார்த்தைகளை நீங்கள் உள்ளபூர்வமாக நம்பிக்கொள்கின்றோர்கள் என்றால், நீங்கள் பதில்க்கூற கடமைப்பட்டிருக்கின்றீர்கள். சர்வ வல்லவனாகிய அல்லாஹ்வின் திருசன்னிதியில் உங்களை அழைத்து வரப்படும். அன்று உங்களிடம் கண்டிப்பாக கேள்வி எழுப்பப்படும். உண்மையே உணர்ந்து கொண்டதற்கு பிறகும் அதை மறைத்து கொள்ள முயற்சிப்பது பெரிய குற்றமே ஆகும். படைத்தவனின் அன்பை நாடுவதற்கு பதிலாக படைப்பினங்களை வணங்கி விடாதீர்கள். அல்லாஹ்வுக்கு மட்டுமே அஞ்சுங்கள். மனிதர்களை கண்டு பயந்துவிடாதீர்கள். உண்மையை பகுத்தறியும் நேரத்தைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு குர்-ஆனில் தெரிவிக்கின்றான்.

**''நீங்கள் அறிந்து கொண்டே உண்மையை பொய்யுடன் கலக்காதீர்கள், உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள்''** (2-43).

நான் ஒரு உண்மையான அஹ்மதி என்று இதற்கு முன் நீங்கள் கூறியிருந்தீர்கள். இப்போது நான் ஒரு அஹ்மதி இல்லை என்று கூறிக்கொள்கின்றீர்கள். அதற்கு ஒன்றே காரணமாகும். எனக்கு அல்லாஹ்விடம் இருந்து வெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்றும் அவன் என்னை கலீஃபத்துல்லாஹ்வாக நியமித்திருக்கின்றான் என்றும் நான் கூறியிருந்தேன். இப்போதும் அதை நான் கூறி வருகின்றேன். எனது வார்த்தைகளை நீங்கள் நிராகரித்துவிட்டீர்கள். ஒரு கலீஃபா இருக்கின்றபோது ஒரு கலீஃபத்துல்லாஹ்வை அல்லாஹ் எப்படி அனுப்பிவைப்பான் என்றும் அதெப்படி நிகழும் என்றும் அவர்கள் கேட்கின்றார்கள்.

இதற்கான பதில் எளிதாகும். புனிதகுர்ஆனை படியுங்கள், தூதுவ அரசன் முஹ்மது(ஸ)வின் திரு மொழிகளை படியுங்கள். நீங்களும் நானும் ஏற்றுக்கொண்டிருக்கும் ஹஸ்ரத் அஹ்மத் (அ)மின் போதனைகளை படியுங்கள். உங்களுக்கு பதில் கிடைத்துவிடும் சந்தேகமில்லை.

அஹ்மதிகள் என்று எண்ணிக்கொள்ளும் உங்களது நோக்கத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது(அ) மீதான நம்பிக்கையை நான் கைவிட்டு விட்டேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். மற்றவர்களின் நம்பிக்கையை எடைப்போட நினைக்கும் மூடர்களின் சொல்லுக்கு செவிசாய்த்துக் கொள்ளாதீர்கள். எனது நம்பிக்கை என்னவென்று என்னிடமே விசாரித்துக்கொள்ளுங்கள். நான் அதற்கு பதிலளிக்கின்றேன்.

ஒருவரின் இதயத்தைப் பிளந்து அதிலென்னவென்று பார்ப்பதற்கோ அல்லது மற்றவர்களை காட்டுவதற்கோ ஒரு மனிதனுக்கும் இயலாது. அல்லாஹ்மீது ஆணையாக எனது மரணத்திற்கு பிறகு எனது நம்பிக்கையும் செயல்களுமேயன்றி நீங்களோ வேறு யாராவதோ எனக்கு துணையாக நிலை கொள்ளாது. ஆகாய-பூமிகளை கட்டிக்காக்கின்ற மகத்துவமுடையவனும் சர்வவல்லவனுமாகிய அல்லாஹ்வின் முன் இவ்விஷயம் விசாரணைக்கு வரும்போது, அந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வை சாட்சியாக கொண்டு நான் இவ்வாறு கூறுவேன். ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மது(அ) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் 14-ம் நூற்றாண்டின் முஜத்தீது என்றும் நான் நம்புகின்றேன். அவர் இறைபக்தனும் திருநபி(ஸ)வின் திரு அடியானும் நபி(ஸ) கொண்டு வந்த ஷரியத்தின் உண்மையான தொண்டரும் என்று நான் நம்புகின்றேன். எல்லா வல்ல

அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஞானவும் அறிவும் மனித குலத்திற்கு அவர் வழங்கினார். புதியதாக ஒரு ஷரியத் அவர் கொண்டுவரவில்லை. இதுவே அந்த மஹாத்மாவைக் குறித்துள்ள எனது நம்பிக்கை. எனது இந்த நம்பிக்கையை நிராகரித்து விடவோ ஏற்றுக்கொள்ள மறுக்கவோ என்னை அஹ்மதி முஸ்லீம் இல்லை என்று கூறவோ செய்தால் இதை அனைத்தையும் காண்கின்ற அல்லாஹ்விடம் நீங்கள் பதில் கூறியே தீரும்.

திரு குர் ஆனின் ஒரு வசனத்தோடு இந்த சொற்பொழிவை நான் நிறைவுப்படுத்துகின்றேன்.

**''அல்லாஹ்வை பற்றி பொய் பேசவோ, அல்லது அவனது அடையாளங்களை பொய்யாக்கவோ செய்பவனை விட அக்கிரமாக்காரன் யார்? நிச்சயமாக அக்கிரமகாரர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை''**.(6-22)

இந்த சொற்பொழிவுக்கு பிறகு அல்லாஹ்விடம் இருந்து கிடைத்த ஒரு வெளிப்பாடு இவ்வாறாகும்.

**''அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பின்பற்றுங்கள். கவனத்தோடு இருங்கள். ஆனால் நீங்கள் புறக்கணித்து திரும்பி விடுவீர்களேயானால், புரிந்து கொள்ளுங்கள், தூதுசெய்தியை எட்டவைப்பது மட்டுமே நமது தூதரின் வேலை''**.

*Issued by:* R. Jamaludin Raother Amir
Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
**Phone: 09447001832**

***Translated by***
**Azim Ahmad**
***Sadr Sahibul Faraj***
**Kerala / Tamil Nadu**
**09789180817**